செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 272 நாள்: 11/5/17

சமூகப் பாதுகாப்புத்துறை

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,வேலூர்.

மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் மூலம் மத்திய அரசு மற்றும் சமூப்பாதுகாப்புத்துறை இணைந்து 1985-86 முதல் போதை தடுப்பு திட்டத்தினை செயல்முறைப்படுத்தி வருகிறது. அதன் முக்கிய குறிக்கோள் மதுநுகர்வுக்கு அடிமைப்படுதல் மற்றும் மட்டுமீறிய போதைப்பொருள் நுகர்வு ஆகியவற்றால் ஏற்படும் தீங்கு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு மற்றும் கல்வி மூலமாக கொண்டு செல்லுதல் மற்றும் போதைக்கு அடிமையானவர்களை கண்டறிந்து, ஊக்குவித்தல்,ஆலோசனை வழங்குதல், போதைக்கு அடிமையானதிலிருந்து விடுவித்தல், மறுவாழ்வு அளித்தல் போன்ற சமூகம் சார்ந்த சேவைகளை வழங்கி அவர்களை முழுமையான நபர்களாக மாற்றுதல் ஆகும்.

நுகர்வோர் விலை குறியீடு கணிசமாக உயர்ந்துள்ளதால் 2006 ஆம் ஆண்டு அத்திட்டத்திற்கான செலவினத் தொகையினை தற்போது மத்திய அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. அதன் விவரம் http://dor.gov.in/nationalfundcontroldrugabuse வலையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ளது.
(http://socialjustice.nic.in/pdf/sch-drug-1115.pdf)-விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்ய-

மேலும் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவித்துள்ளபடி, போதை மற்றும் மட்டுமீறிய போதைப்பொருள் நுகர்வு தடுப்பு திட்டத்தினை செயல்முறைப்படுத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், 2017-2018 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் நிதியுதவினை பெற ஏதுவாக தங்களது கருத்துருவினை 09.05.2017 முதல் 13.05.2017 வரை இரு பிரதிகளாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிட வேண்டும்.

ஆணையர்,
சமூகப்பாதுகாப்புத்துறை,
எண் 300,புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
கெல்லீஸ், சென்னை-600 010
தொலைபேசி எண்:26426421/26427022

11.5.2017
செ.ம.தொ.அ.
வேலூர்-9.

R:D\Desktop1\file\sangeeth\:\ PO(ints)1111.doc